## ஆரோக்கியமான நடைமுறைகள் மூலம் நாம் காசநோயை (TB) வெல்லலாம்.



காசநோயாளிகள் இருமும் போதும் தும்மும்போதும் கைக்குட்டையால் அவரது மூக்கு மற்றும் வாய் பகுதியை மூடிக் கொள்வதின் மூலம் காசநோயை (TB) பரவாமல் தடுக்க முடியும்.



நோயாளிகள் பொது இடங்களில் எச்சில் துப்புவதை தவிர்க்க வேண்டும்.



காசநோய்க்கான (TB) அறிகுறிகள் தென்பட்டால் மருத்துவரின் ஆலோசனைப்படி உடனடியாக பரிசோதனை செய்து கொள்ளுதல்.



காசநோய் எதிர்ப்பு சக்திக்கான வலிமையைப் பெற சமச்சீரான மற்றும் ஆரோக்கியமான உணவுகளை சிகிச்சையின் போது எடுத்துக் கொள்ள வேண்டும்.







உங்கள் தினசரி உணவில் பருப்பு வகைகள், தானியங்கள், பால் மற்றும் பால்பொருட்கள், எண்ணெய் மற்றும் நெய், சப்பாத்தி, சாதம், நிலக்கடலை, கொய்யாப்பழம் மற்றும் வாழைப்பழம் போன்ற பழங்கள் பிறவற்றையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

## நிக்ஷய்போஷன் யோஜனா (காசநோய்க்கான ஊட்டச்சத்து திட்டம்)

இந்திய அரசு காசநோயாளிகளின் ஊட்டச்சத்திற்காக மாதந்தோறும் **₹500** ஊக்கத் தொகையாக அளிக்கிறது. சிகிச்சை முடியும் வரை இந்த திட்டம் தொடரும்.

இந்த திட்டத்தின் நன்மையை பெற நோயாளி இந்திய அரசின் நிக்ஷய் போஷன் யோஜனாவில் பதிவு செய்வது கட்டாயம். நோயாளிகள் இந்த திட்டத்தில் பயன் பெற தங்களின் கீழ்க்கண்ட தகவல்களை முழுமையாக உங்கள் மருத்துவர்/ஜீட் அலுவலர் குழுவிடம் கொடுக்கவும்.

இந்த திட்டத்தின் கீழ் பயன் பெற தயவு செய்து கீழ்க்கண்ட தகவல்களை அளியுங்கள்:

- **நோயாளியின் பெயர் நோயாளியின் தொலைபேசி எண்**
- **நோயாளியின் வங்கி கணக்கு எண்**
- **வங்கியின் பெயர் மற்றும் முகவரி**
- **வங்கியின் ஐஎஃப்எஸ்சி (IFSC) கோடு**

தயவு செய்து வங்கி பாஸ் புத்தகத்தை, தகவல் சரிபார்ப்பிற்காக காண்பிக்கவும்.

உங்கள் வங்கி பாஸ் புத்தகம் மற்றும் ஆதார் அட்டையின் (அல்லது ஏதேனும் இதர அடையாளச் சான்றின்) நகல்களை தேவைப்படும் நேரத்தில் கொடுக்க தயாராக வைத்திருங்கள்.

பொதுமக்களின் நலன் கருதி வெளியிடப்படுகிறது.

Joint Effort for Elimination of Tuberculosis




பொதுமக்களின் நலன் கருதி வெளியிடப்படுகிறது.

Joint Effort for Elimination of Tuberculosis

## காசநோய் (TB) என்றால் என்ன?

காசநோய் (TB) என்பது பாக்டீரியா கிருமியால் பரவும் ஒரு தொற்று நோயாகும். இது யாரையும் பாதிக்கலாம். TB கிருமிகள் காசநோயாளி இருமும்போது அல்லது தும்மும் போது காற்றில் கலந்து பிறரை பாதிக்கக் கூடும். கவலை வேண்டாம், காசநோயை வராமல் தடுக்கவும், குணப்படுத்தவும் முடியும். காசநோய் சம்பந்தப்பட்ட அறிகுறிகள் இருந்தால் உடனடியாக ஒரு மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.



## காசநோயின் (TB) அறிகுறிகள்



இரண்டு வாரங்களுக்கும்
மேலாக இருமல்



இருமும் போது
இரத்தம் வருதல்



காய்ச்சல்



உடல் எடை குறைதல்



சளியுடன் இருமல்



பசியின்மை

## ஆரம்ப கட்டத்திலேயே நோயைக் கண்டறிதல், குணப்படுத்துவதற்கான முதல் படியாகும்





காசநோய் (TB) பரிசோதனை செய்து கொள்ள மருத்துவரை தொடர்பு கொள்ளுங்கள்.
சளி பரிசோதனையின் மூலம் காசநோயை (TB) கண்டறியலாம். சரியான சளி பரிசோதனைக்கு
உமிழ்நீரற்ற சளியை கொடுக்க வேண்டும் என்பதை நினைவில் வையுங்கள்.

## காசநோய் (TB) க்கான சிகிச்சை



காசநோய் (TB) முழுமையாக குணப்படுத்தக் கூடியது. இந்த சிகிச்சையானது 6 முதல் 8 மாதங்கள் அல்லது அதற்கு மேலும் தொடரலாம்.



பரிந்துரைக்கப்படும் காலம் முழுவதும் சிகிச்சையை தொடர வேண்டும் மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மட்டுமே மருந்தை நிறுத்த வேண்டும்.



இடையே சிகிச்சையை நிறுத்தினாலோ அல்லது மருந்துகளை ஒழுங்காக எடுத்துக் கொள்ளாமல் இருந்தாலோ, இந்நோயை குணப்படுத்த முடியாமல் போய்விடும். மேலும் நோயாளிக்கு மரணம் கூட ஏற்படலாம்.

## சிகிச்சையின் போது கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியவை கீழ்வருமாறு



காசநோய்க்கான சிகிச்சையின் போது புகையிலை, பீடி, சிகரெட், குட்கா மற்றும் மது போன்ற போதையூட்டும் பொருட்களை தவிர்க்க வேண்டும்.



சிகிச்சையின் போது குமட்டல், வாந்தி, ஆரஞ்சு அல்லது சிவப்பு நிறத்தில் சிறுநீர், எச்சில் அல்லது கண்ணீர் வருதல் மேலும் வயிற்று வலி போன்ற பக்க விளைவுகள் வரலாம். இதற்காக பதற்றப்படாதீர்கள். இந்த பிரச்சனைகள் அதிகரித்தால் மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள். ஆனால், நீங்களாகவே சிகிச்சையை நிறுத்தி விடாதீர்கள்.